மாண்புமிகு திரு. செ. மாதவன் : நாங்கள் எதிர்க்கட்சியில் இருந்தபோது அவர்களை கெஜெட் பதிவு பெற்றவர்களாக மாற்றுவதோடு சம்பளத்தையும் உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று அப்போதைய முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டோம். அவர்கள் கெஜெட் பதிவு ஆக்குவதற்கு ஒத்துக் கொண்டார்கள், சம்பளம் கூட்டிக் கொடுக்க முடியாது என்று கூறி விட்டார்கள். இப்போது நம்முடைய அரசாங்கம் அவர்களுக்குச் சம்பளத்தைக் கூட்டிக் கொடுப்பதுபற்றி பரிசீலித்து வருகிறது.

திரு. டி. மார்டின்: சென்னை உயர்நீதி மன்றத்தில் பணி புரியும் பணியாளர்களுக்கு தலைமைச் செயலகத்தில் கொடுக்கப்படும் போல் ஸ்கேல் ஆப் பே-யைப்போல் கொடுக்கவேண்டுமென்று கோரி தலைமை நீதி மன்றத்தில் இருந்து அரசுக்கு ஏதேனும் கோரிக்கை வந்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இது சப் மாஜிஸ்ட்ரேட்டுகள் பற்றிய கேள்வி. தனிக் கேள்வி போடவும்.

சிறைச்சாலைகளுக்கு ஆலை அரிசி விநியோகம்

*** 58 வினா—திரு. எஸ். ஜே. ராமசாமி :** மாண்புமிகு சட்ட, கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

சிறைச்சாலைகளில் கைதிகளுக்குத் தற்போது கொடுக்கப்பட்டு வரும் கைக்குத்தல் அரிசிக்குப் பதிலாக ஆலைகளில் தயாராகும் அரிசி கொடுக்கும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. எஸ். ஜே. ராமசாமி: சிறையில் அமைச்சர் அவர்கள் கூட இருந்திருக்கிறார்கள். அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அங்கு கைக்குத்தல் அரிசி பயன்படுத்தப்படுகிறது. ஆனால் கைதிகள் அதைச் சாப்பிடுவது இல்லை. கைக்குத்தல் அரிசி சொசைடிகளும் சரியான முறையில் கைக்குத்தல் அரிசியைத் தயார் செய்து கொடுக்கவில்லை. ஆகவே, இதற்குப் பதிலாக வெளியிலிருந்து அரிசி வாங்கிக் கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கைக்குத்தல் அரிசியில் சத்து இல்லையென்பதை ஒத்துக்கொள்ள முடியாது. சத்துள்ள உணவு என்ற காரணத்தால்தான் போடுகிறார்கள். இந்த அரிசி கிடைக்காவிட்டால் வெளியில் இருந்து வாங்கலாம் என்று இப்போதே உத்தரவு இருக்கிறது.

திரு. .இல. பலராமன் : தற்போது அரசினர் கைதிகளுக்கு கைக்குத்தல் அரிசி என்ற பெயரால் மில்களில் தயாரிக்கப்படும் அரிசி வழங்கப்படுவதாகப் புகார்கள் வந்துள்ளனவா ? அரசாங்கம் எடுத்த நடவடிக்கை என்ன ?

1968 ஆகஸ்ட் 20]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அப்படி அரிசி மாற்றம் செய்வதாகத் தகவல் இல்லை.

திரு. கே. என். குமாரசாமி : சிறைச்சாலைகளில் கைதிகளுக்காக கொடுக்கப்படும் எண்ணெய், சீக்காய் போன்றவை பற்றாக்குறையாக இருக்கின்றன. அதைப் போக்க அரசு முயற்சி எடுத்துக் கொள்ளுமா ? அவர்களுக்குக் கொடுக்கப்படும் துணி மணிகள் மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றன. அவற்றை அன்றாடம் சுத்தப்படுத்திக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போதே அவையெல்லாம் சிறந்த முறையில் கவனிக்கப்படுகிறது.

திரு. மா. பா. சாரதி : கைக்குத்தல் அரிசி பார்ப்பதற்குச் சிகப்பாக இருக்கிறது. அதோடு இரும்புப் பாத்திரங்களில் சிறைகளில் சமையல் செய்கிறார்கள். அதனால் அந்தச் சாதம் கறுத்து விடுகிறது. ஆகவே, வேறு பாத்திரங்களில் சமையல் செய்வதற்கு வழி செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அரிசி மிகவும் வெள்ளையாகி விட்டால் சத்துக் குறைந்து விடுவதாகச் சொல்லுகிறார்கள். சமையல் செய்யும் பாத்திரத்தை மாற்றுவது பற்றி யோசித்தோம். அதைப்பற்றி ஆராய்ச்சி செய்து என்ன மாதிரிப் பாத்திரங்களைப் பயன்படுத்தலாம் என்பது பற்றிச் சொல்லும்படி தலைமைச் சிறை அதிகாரியைக் கேட்டிருக்கிறோம்.

திரு. எஸ். பரமசிவம் : கைக்குத்தல் அரிசி சத்துள்ள உணவு என்பதாலும், ஆயிரக்கணக்கான மக்கள் அதனாலே வாழ்க்கை நடத்துகிறார்கள் என்பதாலும் அரிசன உணவு விடுதிகளுக்கு மட்டுமல்லாமல் அனைத்து மாணவ உணவு விடுதிகளிலும் கைக்குத்தல் அரிசியைப் போட அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : காதி போர்டு துணைத் தலைவர் அவர்கள் அக்கறையோடு இந்தக் கேள்வியைக் கேட்டிருப்பதைப் பாராட்டுகிறேன்.

சென்னை பொது மருத்துவ மனை

* 59 வினா—**திரு. கொளத்தூர் கோதண்டம் :** மாண்புமிகு மருத்துவத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை (ஜெனரல்) மத்திய மருத்துவ மனையில் நோயாளிகளுக்கு ஏ-வகுப்பு, பி-வகுப்பு அறைகள் கிடைப்பது கடினமாக இருப்பது அரசினருக்குத் தெரியுமா?

(இ) ஆம் எனில், அதை நிவர்த்தி செய்ய என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கிறது ?